**பிப்ரவரி – 02**

# TNPSC துளிகள்

- இந்திய தனியார் மின்னணு வரத்தக நிறுவனமான அமேசான் ஆனது மும்பையை அடுத்து, தனது இரண்டாவது சில்லறை வணிக விற்பனைக் கூடத்தை கொல்கத்தாவின் சீல்டா ரயில் நிலையத்தில் அமைத்துள்ளது.
- ஐ.நா சபையானது இந்தியாவின் கீதா சபர்வாலை தாய்லாந்து நாட்டில் ஐ.நா. சபையின் ஒருங்கிணைப்பாளராக நியமித்துள்ளது.
    - ஐ.நா. சபையின் ஒருங்கிணைப்பாளர் பதவியானது ஐ.நா. வளர்ச்சி அமைப்பின் மிக உயர்ந்தப் பதவி ஆகும்.
- இந்திய விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான இஸ்ரோ அடுத்த 5 ஆண்டுகளில் 500 குறைந்த செலவிலான செயற்கைக் கோள் ஏவுதல் வாகனங்களைத் தயாரிக்க இருக்கின்றது.
    - இந்த வாகனங்கள் 500 கிலோ எடையுள்ள செயற்கைக் கோள்களைத் தாங்கிச் செல்லும் திறன் கொண்டவையாகும்.
- மூத்த பெண்ணியவாதி, சமூக ஆர்வலர் மற்றும் எழுத்தாளரான வித்யா பால் என்பவர் 2020 ஆம் ஆண்டு ஜனவரி 30 அன்று காலமானார்.
    - இவர் அனைத்து இந்து மத வழிபாட்டு இடங்களிலும் பெண்களை அனுமதிக்கும் சட்டத்தை அமல்படுத்தக் கோரி 2016 ஆம் ஆண்டில் மும்பை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.
- இந்தியா - பாகிஸ்தான் நாடுகளின் எல்லையில் ஏற்பட்டுள்ள வெட்டுக்கிளித் தாக்குதல்களை சமாளிக்க பாகிஸ்தானில் தேசிய அவசரநிலை அறிவிக்கப் பட்டுள்ளது.
    - 2020 ஜனவரி மாத இறுதிக்குள், இந்திய எல்லையான குஜராத் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பாகிஸ்தான் மற்றும் ஈரானில் இருந்து வரும் பாலைவன வெட்டுக்கிளிகள் பயிர்களுக்கு அதிக அளவிலான சேதத்தை ஏற்படுத்தின.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் எஃகுத் தேவை குறித்த அறிக்கை

- உலக நீடித்த வளர்ச்சிக்கான உச்சி மாநாடானது இந்தியாவின் எஃகுத் தேவை குறித்த தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின்படி, நாட்டின் எஃகுத் தேவை தொடர்ந்து அதிகரித்தால், எஃகுத் துறையிலிருந்துப் பெறப்படும் CO2 வெளியேற்றமானது 2050 ஆம் ஆண்டுக்குள் 600 மில்லியன் டன்களை எட்டும்.
- ஆற்றல் மற்றும் வளங்கள் நிறுவனத்தின் (TERI) 'குறைந்த கார்பன் பயன்பாட்டைக் கொண்ட எஃகுத் துறையை நோக்கி' என்ற அறிக்கையின்படி, தற்போது எஃகுத் துறையிலிருந்து பெறப்படும் கார்பன்-டை-ஆக்சைடு வெளியேற்றமானது 242 மில்லியன் டன்கள் ஆகும்.
- TERI அமைப்பானது 2030 ஆம் ஆண்டு முதலாக CO2 உமிழ்வுகளுக்கு அபராதம் விதிக்க பரிந்துரைக்கின்றது.
- தொழில் நிறுவனங்கள் கார்பன் நீக்கத் தொழில்நுட்பங்களைப் பின்பற்ற இந்த

அமைப்பு கட்டாயப்படுத்தும்.

## சம்பிரிதி இராணுவப் பயிற்சி

- இந்தியாவும் வங்கதேசமும் கூட்டு இராணுவ பயிற்சியின் 9வது பதிப்பை மேகாலயாவின் உம்ரோய் என்ற இடத்தில் நடத்துகின்றன.
- சம்பிரிதி பயிற்சியானது இந்தியாவிலும் வங்கதேசத்திலும் மாறி மாறி நடத்தப்படும் ஒரு வருடாந்திரப் பயிற்சியாகும்.
- இது 2011 ஆம் ஆண்டில் முதல் முறையாக நடைபெற்றது.

## இந்திய ரயில்வே - பழ ரயில் & சரக்கு ரயில் பெட்டி

- பழங்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக இந்திய ரயில்வேயானது பிரத்தியேகமான ஒரு வாழை கொள்கலன் ரயிலை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ஆந்திராவின் ததிபாத்ரி ரயில் நிலையத்திலிருந்து 980 மெட்ரிக் டன் எடை கொண்ட வாழைப் பழங்களை மும்பையில் உள்ள ஜவஹர்லால் நேரு துறைமுகத்திற்கு ஏற்றிச் சென்ற முதல் "பழ ரயில்" இதுவாகும்.
- இந்த வாழைப் பழங்கள் 'ஹேப்பி பனானாஸ்' என்ற குறியீட்டுப் பெயரில் ஏற்றுமதி செய்யப் படுகின்றன.
- இந்திய ரயில்வேயானது சமீபத்தில் டெல்லி சப்தர்ஜங் ரயில் நிலையத்தில் அதிகத் திறன் கொண்ட சரக்கு ரயில் பெட்டிகளை அறிமுகப் படுத்தியது.
- இந்தப் புதிய சரக்கு ரயில் பெட்டிகள் கபுர்தலா ரயில் பெட்டித் தொழிற்சாலையில் வடிவமைக்கப்பட்டுத் தயாரிக்கப் பட்டன.
- லிங்கே ஹாஃப்மேன் புஷ் என்ற வகையைச் சேர்ந்த ரயில் பெட்டிகளில் இது முதலாவது வகையாகும்.



FIRST FRUIT TRAIN

# சர்வதேசச் செய்திகள்

## சர்வதேச சுகாதார அவசரநிலை - கொரோனா வைரஸ்

- உலக சுகாதார நிறுவனமானது கொரோனா வைரஸ் தொடர்பாக சர்வதேச சுகாதார அவசர நிலையை அறிவித்துள்ளது.

- சீனாவில் தோன்றிய இந்த நோயானது தற்போது மற்ற 18 நாடுகளுக்குப் பரவியுள்ளதால் இந்த அமைப்பு அவசரநிலையை அறிவித்துள்ளது.
- மேலும், மனிதத் தொடர்பு மூலம் (human-to-human) இந்த நோய் பரவுகின்றது.
- இந்நோயின் பரவலானது PHEIC இன் அளவுகோல்களைப் பூர்த்தி செய்கின்ற காரணத்தால் சுகாதார அவசரநிலை அறிவிக்கப் பட்டுள்ளது.
- PHEIC என்பது சர்வதேச பொது சுகாதார அவசரநிலை அளவுகோல் ஆகும்.

### இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டம்

- ராணுவக் கண்காட்சி (DefExpo) வரலாற்றில் முதல் முறையாக, இந்தியாவும் ஆப்பிரிக்காவும் தங்கள் நாடுகளின் பாதுகாப்பு உறவுகள் குறித்து விவாதிக்க உள்ளன.
- இந்தியாவின் மிகப்பெரிய பாதுகாப்புக் கண்காட்சி 2020 பிப்ரவரி 5 முதல் 2020 பிப்ரவரி 8 வரை லக்னோவில் நடைபெற உள்ளது.
- இந்த நிகழ்வின் ஒரு பகுதியாக, இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு மாநாடு நடைபெற உள்ளது.
- இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்பு மாநாடானது 2020 பிப்ரவரி 6 அன்று நடைபெற உள்ளது.
- இந்த மாநாட்டில் சுமார் 24 நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.
- பல ஆப்பிரிக்க நாடுகளின் காலனித்துவத்திற்குப் பிந்தைய ஆட்சியில் இராணுவத் தளங்களை அமைக்க இந்தியா உதவியுள்ளது.
- நைஜீரியாவில் பாதுகாப்புத் துறைக் கல்லூரி, எத்தியோப்பியாவில் இராணுவ அகாடமி, கானாவில் விமானப்படை ஆகியவற்றை இந்தியா அமைத்துள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

### பொருளாதார ஆய்வு அறிக்கை 2020

- 2020 ஆம் நிதியாண்டின் பொருளாதார ஆய்வறிக்கையானது மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனால் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்யப் பட்டுள்ளது.
- இந்த ஆய்வறிக்கையானது நாட்டின் பொருளாதாரப் போக்குகள், கடந்த 12 மாதங்களில் நாட்டில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி மற்றும் வளங்கள் குறித்து அறிய உதவுகின்றது.
- பொருளாதார ஆய்வறிக்கை 2020இன் கருப்பொருளானது "வளங்களை உருவாக்குதல், வணிக சார்புக் கொள்கைகளை மேம்படுத்துதல், பொருளாதாரத்தில் நம்பிக்கையை வலுப்படுத்துதல்" என்பதாகும்.
- பொருளாதார விவகாரத் துறையின் பொருளாதாரப் பிரிவானது தலைமைப் பொருளாதார ஆலோசகரான டாக்டர் கிருஷ்ணமூர்த்தி சுப்பிரமணியனின் வழிகாட்டுதலின் படி இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்துள்ளது.




***முக்கியக் கூறுகள்***

- ❖ இந்த ஆய்வறிக்கையின் படி, தற்போதைய ஆண்டின் வளர்ச்சி 5% ஆகும்.
- ❖ 2020-21 ஆம் ஆண்டிற்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 6% முதல் 6.5% வரை இருக்கும்.
- ❖ 2020 ஆம் நிதியாண்டின் (2019-20) தொழில்துறை வளர்ச்சியானது 2.5% ஆகும்.
- ❖ 2019 (2018-19) ஆம் நிதியாண்டின் அந்நிய செலாவணி இருப்பு 461.2 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- ❖ 2020 ஆம் நிதியாண்டின் பொருட்கள் மற்றும் சேவை வரி வசூலிப்பானது 4.1% அதிகரித்துள்ளது.
- ❖ உலக வங்கியின் தொழில்முனைவோர் குறித்த தரவுப்படி, புதியதாக உருவாக்கப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கையில், உலக அளவில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது என்று இந்த ஆய்வறிக்கை தெரிவித்துள்ளது.
- ❖ சேவைத் துறையில் ஏற்பட்டுள்ள புதிய நிறுவன உருவாக்கமானது உற்பத்தி, உள்கட்டமைப்பு அல்லது விவசாயத் துறைகளை விட கணிசமாக அதிகமாக உள்ளது.
- ❖ குஜராத், மேகாலயா, புதுச்சேரி, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் உற்பத்தித் துறையில் தொழில் முனைவோர் செயல்பாடானது அதிகமாக உள்ளது என்று இந்த ஆய்வறிக்கை குறிப்பிடுகின்றது.
- ❖ இந்தியா 2024-25 ஆம் ஆண்டுக்குள் 5 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள பொருளாதாரத்தை அடைய, உள்கட்டமைப்புத் துறையில் 1.4 டிரில்லியன் அமெரிக்க டாலர்களைச் செலவிட வேண்டும் என்று இந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.
- ❖ 2013-14 ஆம் ஆண்டில் 64.2 சதவீதமாக இருந்த அரசினால் சுகாதார நலத் துறைக்குச் செலவிடப்படும் தொகையானது 2016-17 ஆம் ஆண்டில் 58.7 சதவீதமாக குறைந்துள்ளது.
- ❖ இந்த ஆய்வறிக்கையின் படி, இந்தியப் பொருளாதாரத்தில் 55% சேவைத் துறை பங்காற்றுகின்றது.
- ❖ 2019 ஆம் ஆண்டு ஏப்ரலில் 3.2 சதவீதத்திலிருந்த பணவீக்கம் 2019 ஆம் ஆண்டு டிசம்பரில்

2.6 சதவீதமாகக் குறைந்துள்ளது. இது பொருளாதாரத்தில் தேவை பலவீனமடைவதை பிரதிபலிக்கின்றது.





- 2011-12 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை பெண்களின் வேலைவாய்ப்பு 8% அதிகரித்துள்ளது.
- கால்நடை
  - இந்த ஆய்வறிக்கையின் படி, கிராமப்புறக் குடும்பங்களின் வருமானத்தின் இரண்டாம் நிலை ஆதாரமாக கால்நடைகள் மாறிவிட்டன.
  - கால்நடைகளின் வளர்ச்சியானது கடந்த 5 ஆண்டுகளில் 7.9% ஆக உள்ளது.
- பசுமை இந்தியா
  - காடு மற்றும் மரங்களின் பரப்பு 80.73 மில்லியன் ஹெக்டேரை எட்டியுள்ளது என்றும் இந்த ஆய்வறிக்கை கூறுகின்றது.
  - இது நாட்டின் மொத்த புவியியல் பரப்பளவில் 24.56% ஆகும்.
- ஆயுஷ்மான் பாரத் திட்டம்
  - இந்தத் திட்டமானது 2022 ஆம் ஆண்டுக்குள் 150000 சுகாதார மற்றும் ஆரோக்கிய மையங்களை (Health and Wellness Centres - HWC) அமைக்க முன்மொழியப் பட்டுள்ளது.
  - 2020 ஆம் ஆண்டு ஜனவரி 14 ஆம் தேதி வரை இதுவரை 28,005 HWC கள் அமைக்கப் பட்டுள்ளன.
- வேலை உருவாக்கம்

- 2011-12 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2017-18 ஆம் ஆண்டில் சம்பள ஊழியர்கள் அல்லது வழக்கமான ஊதிய ஊழியர்களின் வேலை உருவாக்கம் 5% அதிகரித்துள்ளது.
- சுமார் 2.62 கோடி புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

❖ பசுமைப் பத்திரச் சந்தை

- சீனாவுக்குப் பிறகு வளர்ந்து வரும் இரண்டாவது பெரிய பசுமைப் பத்திரச் சந்தையாக இந்தியா மாறியுள்ளது.
- சுற்றுச்சூழல் குறித்த நிலையான முதலீடுகளை அதிகரிக்க 2019 ஆம் ஆண்டில் இந்தியா சர்வதேச நீடித்த சுற்றுச்சூழல் நிதியத்தின் தளத்துடன் இணைந்தது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### உலக விளையாட்டின் சிறந்த வீராங்கனை விருது - 2019

❖ இந்திய மகளிர் ஹாக்கி அணி வீராங்கனையான ராணி ராம்பால் "2019 ஆம் ஆண்டுக்கான உலக விளையாட்டின் சிறந்த வீராங்கனை" என்னும் பட்டத்தை வென்றுள்ளார்.

❖ இந்த விருதினைப் பெறுகின்ற உலகின் முதலாவது ஹாக்கி வீரர் இவராவார்.

❖ 2020 ஆம் ஆண்டில் ராணி ராம்பாலுக்கு இந்திய அரசின் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




# இதரச் செய்திகள்

## டாங்கி செயலி

- இந்தியர்களிடையே செய்தி தொடர்பான கல்வியறிவை ஊக்குவிக்க கூகுள் நிறுவனமானது I மில்லியன் அமெரிக்க டாலர்களை மானியமாக அறிவித்துள்ளது.
- இதற்காக இந்நிறுவனம் "டாங்கி" (Tangi) என்ற புதிய செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- கூகிளின் டாங்கி செயலியானது "டு இட் யுவர்செல்ஃப்" என்ற காணொளிகளில் கவனம் செலுத்துகின்றது.
- இந்த செயலியின் பெயர் TeAch aNd GIve என்ற பெயரிலிருந்து ஈர்க்கப் பட்டுள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★